# காடுகளின் பயன்கள்

சுகமான வாழ்வுக்கு அடிப்படையாகத் திகழ்வது________________. மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் தொகுதிகளையே காடுகள் என்கிறோம். ஒரு நாட்டின் _________________________ வனவளம் மிகவும் முக்கியமானதாகும். மரங்கள் நம் வாழ்வோடும் மதத்தோடும், கலாச்சாரத்தோடும் இணைந்துள்ளன என்றால் அதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

காடுகள் உயிரினங்களுக்குப் பல வகையில் பயனளிக்கின்றன என்றால் அது மிகையாகாது. உலக அளவில் 70 சதவிகித தாவரங்கள் மற்றும் விலங்குகள் காடுகளில் வாழ்கின்றன. எடுத்துக்காட்டாக, யானை, சிங்கம், புலி, _________________, கரடிகள் போன்ற விலங்குகளின் உறைவிடமாகத் திகழ்வது காடுகளே எனலாம். அங்கு அவைகள் மிகவும் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் தன் இனத்தோடு ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகின்றன. மிருகங்களின் இனம் _____________________ பாதுகாப்பதும் காடுகளே.

இதனைத் தொடர்ந்து, __________________ இருப்பிடமாகவும் காடுகள் திகழ்கின்றன. தாவரங்கள் கரிவளி வாயுவை உட்கொண்டு தனக்குத் தேவையான உணவைத் தயார் செய்து நாம் உயிர் வாழத் தேவையான பிராணவாயுவை வெளியேற்றுகின்றன. ஓர் ஏக்கரில் உள்ள மரங்களிலிருந்து ஒரு வருடத்திற்குக் கிடைக்கும் உயிர்வளியானது 19 மனிதர்கள் ஆயுள் முழுவதும் ___________________ தோள் கொடுக்கின்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அடுத்தப்படியாக, நீரியல் சுழற்சி ஏற்படுபவதற்கும் காடுகளே முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. நீரியல் _______________ ஏற்பட மரங்கள் பெரிதும் உதவுகின்றன. நிலத்தில் இருக்கும் நீரை

ஆக்கம் : ஷாமினி சந்திரன்

LIVEWORKSHEETS

தமது வேர்களால் உரிந்து காற்றில் வெளிவிடுகின்றன (evaporation). இத்தகைய செய்முறையால் ____________________ உண்டாகின்றது.

இதனைத் தொடர்ந்து, காடுகள் பாதுகாக்கப்படுவதன் மூலம் மண் சரிவு, நிலச் சரிவு, இயற்கைப் ________________________ தவிர்க்கின்றன. சூரிய கதிர்கள் நேரடியாக மண் மீது விழுவதனால் அதனுடைய ஈரப்பதம் குறைந்து, அதன் சத்துக்கள் வெளியேறி, நுண்ணுயிர்கள் அழிந்து மண்ணின் மக்கும் தன்மை குறந்துவிடுகின்றது. இதனால் மழை பொழியும் பொழுது மண்ணரிப்பு உண்டாகி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்திலையைத் தவிர்ப்பதற்குக் காடுகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

ஆகவே, மனிதம் செழித்து வளர வேண்டுமாயின் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் காடுகளின் பயன்களை நன்கு உணர்ந்து,______________________________ ; மழை பெறுவோம்; மனித உயிர்களைக் காப்போம்.

| | | | |
|---|---|---|---|
| காடுகளே | மேம்பாட்டிற்கும் | சுவாசிக்கத் | உயிர்வளியின் |
| மான்கள் | மரம் வளர்ப்போம் | மழைப்பொழிவு | பேரிடர்களைத் |
| சுழற்சி | அழியாமல் | | |

*ஆக்கம் : ஷாமினி சந்திரன்*

LIVEWORKSHEETS